RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1869

OPEN ACCESS

# தொல்காப்பியரின் கருப்பொருள் கோட்பாட்டில் கல்வெட்டுகள் காட்டும் தென்கொங்கு நாட்டின் இடைக்கால தொழில் வளர்ச்சி

**ம. மதியழகன் [அ, *]**

[அ] வரலாற்றுத் துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா.

# Industrial Development in South Kongu Region as shown by Stone Inscriptions in Tholkaapiyar's theory

**M. Mathialagan [a, *]**

[a] Department of History, Government Arts college, Udumalpet-642126, Tamil Nadu, India

* Corresponding Author: alaganudt@gmail.com

Received: 20-08-2022
Revised: 30-10-2022
Accepted: 15-11-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

Literature is the mirror of life. Grammatical literary theory is one among the various kind of theories. Tamil literary texts helps us to understand the history of Tamilnadu. Tamil literature follows the principles of Grammar. Tholkaapiyar has given themes in his text Tholkaapiyam. Overall there are eight themes. Literature is made up of these eight themes. Basically the history of the people is recorded in the temple inscriptions. Medieval temples include themes such as deity, food, animals, trees, grass (bird), drum, lyre, message. Medieval inscriptions also mention these themes. This article tries to explain about news and business in detail.

**Keywords:** Tholkaapiyar, Grammar, South Kongu Region, Medieval temples, Stone Inscriptions

## முன்னுரை

கோட்பாடுகளில் இலக்கண இலக்கியக் கோட்பாடும் ஒன்றாகும். தமிழக வரலாற்றை அறிந்து கொள்ள இலக்கியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இலக்கியங்கள் இலக்கண கோட்பாடுகளை பின்பற்றி அமைந்துள்ளன. தொல்காப்பியர் தனது நூற்பாவில் எட்டு வகையான கருப்பொருட்களைக் குறிப்பிடுகின்றார். (தொல் பொருள் நூற்பா எண் - 20) இக்கருப்பொருட்கள் இடைக்காலத்தில் பதினான்காக குறிக்கப்பெறுகின்றது. (அகப்பொருள் விளக்கம் பாடல் எண் 19) கருப்பொருட்களில் ஒன்றாக குறிக்கப்பெறும் செய்தி (தொழில்) கல்வெட்டுகளில் எவ்விதம் பயின்று வருகின்றது என்பதை இக் கட்டுரை விளக்க முற்படுகின்றது (Subramaniyan, 2010).

பண்டைய தமிழக வரலாற்றில் கொங்கு நாடு ஒரு தனிப் பண்பாட்டைக் கொண்டிருந்தது. அதற்கு கொங்கு நாட்டின் புவியியல் அமைப்பை கொண்டிருந்தது ஒரு காரணமாகும். பண்டைய கொங்கு நாடு குடகொங்கு, மீ கொங்கு என பிரிக்கப்பட்டிருந்தது (Manickam, 2001). இதில் மீ கொங்கு என்று அழைக்கப்படும் பகுதி தென்கொங்கு ஆகும். இப்பகுதி கிழக்கு மேற்காக பழனிமுதல் ஆனை மலை வரையும், வடக்கு தெற்காக கோயமுத்தூர் முதல் ஆனைமலை வரை அடங்கியிருந்த பகுதியாகும். தென்கொங்கில் சங்க காலத்தில் ஐநூறு பிரம்மதேய ஊர்கள் இருந்ததாக பதிற்றுப்பத்து

குறிப்பிடுகிறது (இரண்டாம் பத்து பதிகம்). இவ்வூர்கள் புன்புலச்சீறூர்' மூதூர், பருத்தி வேலி, சீறூர் நெடுநல் ஊர், கதுவாய் மூதூர், என அழைக்கப்பட்டன.

இச்சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் கானத்து வேட்டுவர், யானை வேட்டுவன், குறும்பூழ் வேட்டுவன், எறிபுனக்குறவன், மரம் கொல் தச்சன், நெல் அரி தொழுவர், கானவர், பாணன், பல்ஆன் கோவலர், வலைஞர், மறவன், துடியன், புலையன், உழவன், மள்ளன், இடையர், ஆகியோர் வாழ்ந்தனர் (புறநானூறு 202, 319,343,350, 202, 214, 214, 231 206, 209,212, 242,265, 249, 259, 270,280, 285, 287, 360).

சங்க காலத் தொழில் மாந்தர்களான கம்மியர், தொழுவர், கொல்லர் தச்சர், பொன்செய் கம்மியர், செம்பு செய் கம்மியர் முத்து மணிகளில் பணிசெய்வோர், சங்கு அறுப்போர், ஆடைசெய்வோர், மனை வகுப்போர், ஓவியர், மடைத்தொழில் செய்பவர்கள், மருத்துவர், கூடை முறம் கட்டில் செய்யும் தொழிலாளர்கள் (இழிச்சினர்), ஆகியோர் சங்க கால ஊர்களில் பல்வேறு தெருக்களில் வசித்து வந்தனர். (மதுரைக்காஞ்சி 512 - 514 நற்றிணை 363:4-6 153:2-3 313:1-3 , பெரும் 206-208 436-440 புறம்: 95:15 312 :3 95:4:5 .புறம் 206:11 நற் 313,153, புறம் 166 நற் 331, அகம்; 24, 241 புறம் 321, 86 பட்டினப்பாலை 49-50, மதுரைக்காஞ்சி 516-518 புறம் 399 கலித்தொகை 72:13-44 புறம் 311, 137, 289).

## வேட்டையாடுதல்

தொல்காப்பியரின் கருப் பொருட் கோட்பாட்டில் நிலமும் பொழுதும் முதற் பொருளாகும். இதனைக் கொண்டு வேட்டையாடுதலே முதற் தொழிலாக இருந்தமையைக் கற்காலக்கருவிகள் கொண்டு அறிய முடிகின்றது. தென்கொங்கில் கற்கால மனிதர்கள் வேட்டையாடுதல் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு உடுமலையில் இருந்து மூணாறு செல்லும் பாதையில் காணப்படும் பாறை ஓவியங்கள் சான்று பகர்கின்றன. கற்காலத்தைத் தொடர்ந்து கொங்கு நாட்டில் இரும்புக் காலக்கருவிகள் கிடைக்கின்றன. இரும்புக் காலத்தில் இரும்புக் கொழு செய்தல், மணிகள் செய்தல் மட்பாண்டங்கள் செய்தல், நெசவு தொழில் செய்தல், பயிர்த்தொழில், கால்நடை வளர்ப்பு போன்றவை வளர்ச்சி பெற்றன (Manickam, 2001).

முல்லை நிலத்தில் கால்நடை வளர்ப்பு பெருகியபோது காடுகள் அழிக்கப்பட்டு வேளாண்மை பெருகியது. இவ்வேளாண்மை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்கள் ஆயர்களும் வேட்டுவர்களும் ஆவார்கள். மேற்கண்ட மக்கள் மருத நிலத்தில் வேளாண்மையை பெருக்கிய போது உற்பத்தியின் மிகுதி காரணமாக சிற்றரசர்கள் படையெடுப்புகள் வேளிர் மன்னர்களின் அழிவு ஆரம்பமானது. குறிஞ்சி முல்லை பகுதிகளில் பாலை படிவம் கொண்டபோது தென்கொங்கில் கொள்ளை தொழில்கள் அதிகரித்தன. இதனை தென்கொங்கில் கிடைக்கும் கல்பதுக்கைகள் கற்பொறிகள், நடுகற்கள், சான்று பகர்கின்றன. இடைக்காலத்தில் தென்கொங்கில் ஏற்பட்ட உற்பத்தி மிகுதியின் காரணமாக நதிக்கரை ஓரங்களில் அடிக்கடி போர்கள் ஏற்பட்டதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## வேளாண்மை

தென்கொங்கு பகுதியில் ஏற்பட்ட வேளாண்மை தொழில் வளர்ச்சி ஏற்பட்டபோது வீர கேரள மன்னர்கள் தென்கொங்கு பகுதியை ஏழு நாட்டு பிரிவாக பிரித்தனர். இதில் கோனாட்டார்கள் தென்கொங்கின் ஆறுகளை அடிப்படையாகக் கொண்டு தென்கொங்கு பகுதியை ஒன்பது கரைநாடுகளாக பிரித்தனர். மருத நிலத்தில் உணவுத் தேவையின் பொருட்டு வேளாண்மை ஊக்குவிக்கப்பட்டது. சங்க கால தொல்குடிகள் பூலுவர் என்ற பெயரில் மேட்டு நிலங்களில் குடியேற்றம் பெற்றனர். இவர்கள் புஞ்சை வேளாண்மையை வளர்த்தனர். வேளாண்மைத் தொழிலில் உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், நீர்பாசனம், அறுவடை, சேமிப்பு போன்ற தொழில்களை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (அகம் 8:9, 41:4-5, 55:9, புறம் 33:5, நற்றிணை 40:6-7, 60:2-8, 210:1-2, குறுந்தொகை 131:4-5, பெரும்பாணாற்றுப்படை 212, 244-246) சங்க காலத்தில பூலுவர்களுடன் இணைந்து வேளாண்மையை வளர்த்தவர்கள் பறையர்களும் மள்ளர்களும் இடையர்களும் ஆவார்கள். இடைக்காலத்தில் வேளாண் தொழில் என்பது உழவு நாட்கோடல், உழவு, மேழி, ஊற்றாணி, நுகத்தடி, நுகத்துளை, நுகத்தாணி,

பூட்டாங்கயிறு, கொழு, கொழுவாணி, நாற்றுமுடி, தாற்றுக்கோல், எருது (பகடு), ஏர்பூட்டல், ஏர்ஓட்டல், சால், எருவிடுதல், சேறாக்கல், பரம்படித்தல், வித்திடுதல், நாற்றங்கால், நாற்றுப்பறித்தல், முடிஇடுதல், முடிசேர்த்தல், நடவு, நீர் பாய்ச்சுதல், களை நீக்குதல், அறுவடை, சூடு அடித்தல், களம் செய்தல், எருமிதித்தல், நெற்பொலி, நெற்கூடை, தூற்றுமுறம், பொலிகோல் என கம்பர் பல்வேறு வேளாண்மை சார்ந்த தொழில்களை ஏரெழுபதில் குறிப்பிடுகின்றார். கல்வெட்டுகளில் பயின்று வரும் குறுகூலி, புடைகூலி, கூலிப்பா நெல், பாடிக்காவல், போன்ற சொற்கள் கம்பர் காட்டும வேளாண்மைத் தொழிலின் பலவேறு நிலைகளைக் குறிப்பிடுகின்றது. கல்வெட்டுகளில் பயின்று வரும் குடி, மேல்வாரம், கீழ் வாரம், மன்றாடி, உழுத குடி, காரண்மை, மியாட்சி போன்ற சொற்கள் வேளாண்மை தொழிலின் பல்வேறு நிலை மற்றும் வகைப்பாடுகளை எடுத்துரைக்கின்றது (Sridhar et al., 2006).

## நீர்ப்பாசனம்

சஙக காலத்தில் கூவல் தோண்டுதல் (கிணறு தோண்டுதல்) குறித்து அகநானுறு (பாடல்,21:22-25) குறிப்பிடுகின்றது. மன்னர்கள் பள்ளமாக இருக்கும் இடத்தில் நீர்நிலைகளை அமைத்தனர். இடைக்காலத்தில் தென்கொங்கு பகுதியில் குளங்கள் வெட்டப்பட்டன.கால்வாய்கள் மூலம் நீர் நிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. இப்பணியை மேற்கொண்டவர்கள் நீராணிக்கர், நீர் கட்டியார், கரையார் மற்றும் குளத்துப் பள்ளர்கள் ஆவார்கள். இவர்கள் மடையர்கள் என அழைக்கப்பட்டனர். அமராவதி, ஆழியாறு போன்ற ஆறுகளில் பரிசில் போடுதல், மக்களை ஆற்றைக் கடக்க உதவுதல், ஆறு குளங்களில் மீன்பிடித்தல், போன்ற தொழில்களை மள்ளர்கள் செய்து வந்தனர்.

இடைக்காலத்தில் தென்கொங்கு பகுதியில் வேளாண்மையை வளர்த்தவர்கள் பெண்ணை ஆறு பகுதி விருத்தாசலம், திட்டக்குடி, தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை பகுதியில் இருந்து வந்து தென்கொங்கில் குடியேறிய பல்லவரையர்கள் என்ற அரையர்கள் ஆவார்கள். இப்பல்லவரையர்கள் அரசனிடம் பொன் கொடுத்து மன்றாட்டு நிலங்களைப் பெற்று வேளாண்மை வளர்ச்சியை ஏற்படுத்தினர். பல்லவரையர்கள் தென்கொங்கின் வேளாண்மை வளர்ச்சிக்கு அமைப்பியல் ரீதியான முயற்சி எடுத்தவர்கள் ஆவார்கள். அதில் நிலப் பகுப்பு, வேளாண் சங்கம் அமைத்தல் (சித்திரமேழி பெரியநாடு சபை), கோயில் நிர்வாகம் பழங்குடிகளை வேளாண்மைக்காக வளமான நிலங்களில் குடியேற்றுதல், ஆகியவை அடங்கும் (Sridhar et al., 2006). பல்லவரையர்களுக்கு நீர்ப்பாசனம், பாடிக்காவல், கால்நடை வளர்ப்பு, போன்ற தொழில்களில் துணைநின்றவர்கள் மள்ளர்களும், இடையர்களும் ஆவார்கள். இடைக்காலத்தில் உற்பத்தி மிகுதி காரணமாக தென்கொங்கில் வணிகம் வளர்ச்சி அடைந்தது.

## வணிகம்

தமிழகத்தின் கிழக்கு கடற்கரைக்கும் மேற்கு கடற்கரைக்கும் தென்கொங்கு பகுதியில் இருந்து வணிக பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன (Sridhar et al., 2006). வைசிகன் பெறுமே வணிக வாழ்க்கை என்ற தொல்காப்பிய இலக்கண கோட்பாட்டின் படி வணிகர்கள் தென்கொங்கில் விளைந்த நெல், காணம், வரகு, சாமை, கிழங்கு, தினை, கம்பு, பூக்கள் இவற்றை ஏற்றுமதி செய்தனர். தென்கொங்கின் கரிசல் பூமியில் விளைந்த பருத்தியைக் கொண்டு நெசவு தொழில் அமராவதி நதிக்கரையில் வளர்ச்சி பெற்றது (Chandrababu & Thilagavathi, 2003). அமராவதி ஆற்றுப் படுகைகளில் பூக்கள் மற்றும் மருத்துவ மூலிகைகள் பயிரிடப்பட்டன. எள் கடலை போன்ற எண்ணெய் வித்துக்களைக் கொண்டு எண்ணெய் வணிகம் வளர்ச்சியடைந்தது. துணி வணிகம் செய்தவர்களைச் சிலைச்செட்டி என்றும் எண்ணெய் வணிகம் செய்தவர்களை மயிலாட்டி என்றும் கொழுமத்து கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## கால்நடை வணிகம்

தென்கொங்கில் சங்க காலம் முதல் ஆயர்கள் கல்நடைகள் வளர்த்து பால் தயிர் நெய் போன்றவற்றை விற்று வணிகம் செய்து வந்தனர். "நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள். எருமை நல்லான் கருநாடு பெறூவும் மடிவாய் கோவலர்"(164-166) என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. பதிற்றுப்பத்து (பாடல் 21) ஆட்டு வணிகர்களை பாசவர்கள். என்று குறிப்பிடுகின்றது. சங்க காலத்தில் பண்டமாற்றுமுறை நடைமுறையில் இருந்தது. (புறம். 33:1-8 தயிரைக்கொடுத்து நெல்லை பெறுதல் ஐங்குநுறூறு: மருதம் புலவிப்பத்து 47-48 மீன் கொடுத்து தானியம் பெறுதல், குறுந்தொகை: 269:4-6 உப்புக் கொடுத்து நெல் பெறுதல், அகம் 390:80;-89. நற்றிணை 97:6-9 பூவைக்கொடுத்து நெல்பெறுதல், குறுந்தொகை: 100;3-5 தந்தத்தை கொடுத்து தானியம் பெறுதல்) இடையர்கள் இடைக்காலத்தில் கோயிலோடு இணைக்கப்பட்டு கால்நடை வணிகத்தைப் பெருக்கினர்.

## சந்தை வணிகம்

தென்கொங்கில் பொள்ளாச்சி, கடத்தூ, கனியூர், போன்ற பகுதிகளில் சந்தை வணிகம் இடைக்காலத்தில் சிறந்து விளங்கியுள்ளது. சந்தைகளில் உணவு தானியம், மண்பாண்டங்கள், இறக்குமதி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. சந்தைகள் கோயில்கள் அமைந்த பகுதிகளில் அமைந்திருந்தது. இதனால் கோயில் பொருளாதரம் மேலோங்கியது. சங்க காலத்தில் உற்பத்தி மிகுதியால் மருத நில ஊர்களில் அடிக்கடி படைஎடுப்புகள் நிகழ்ந்தன. இடைக்காலத்தில் இப்படை எடுப்புகள் தென்கொங்கின் கோட்டைகள் மீது நடத்தப்பட்டு உற்பத்தி மிகுதி கொள்ளையடிக்கப்பட்டது எனவே தென்கொங்கில் பல கோட்டைகள் கட்டப்பட்டது.

## படைத்தொழில்

"மன்னோர் பாங்கின் பின்னோர் ஆகுப" என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி வணிகரும் வேளாண்குடி மக்களும் படைத்தலைவர்களாகவும் வீரர்களாகவும் பணியாற்றினர். இடைக்காலத்தில் படைத்தொழில் முக்கிய தொழிலாக அமைந்தது. இதன் மூலம் குதிரைகள் வளர்த்தல், கோட்டைகள் காத்தல், கோட்டையில் பொருட்களை காத்தல், வணிக தொழில் வழிப்பாதுகாப்பு, மாட்டு வண்டிகள் செய்தல், தச்சுதொழில் செய்தல் போன்ற தொழில்கள் இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்தது. தென்கொங்கில் அமராவதி ஆழியாறு நதிக்கரைகளில் தாராபுரம் கடத்தூர், கொழுமம், கனியூர், குறிச்சிக்கோட்டை, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர், ஆனைமலை போன்ற பகுதிகளில் கோட்டைகள் அமைந்திருந்ததை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## வரி வசூல்

சங்க காலத்தில் குடிமக்களிடம் ஆறில் ஒன்று வரியாக வசூல் செய்தல் உல்கு (சுங்கம்) வசூலித்தல் நடைமுறையில் இருந்தது. இடைக்காலத்தில் சாமந்தர்கள் என்னும் அரச பிரதிநிதிகள் சாமந்த பேரேடு கொண்டு குடிவிழுக்காட்டின்படி வரி வசூலித்தனர் ஊர்சபைகள் ஊர் கணக்கர்கள் நாட்டுக்கணக்கர்களை கொண்டு வரிவசூல் செய்தனர். ஊர்சபைகள் ஊர் விநியோகம் என்ற வரி செய்ததை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கல்வெட்டில் பயின்று வரும் இச்சொல் வேலை பகிர்வினை குறிப்பிடுகின்றது.

## வங்கித்தொழில்

கணக்குகளை முறையாக எழுதுவதற்கு ஊர்கணக்கு, கோயில் கணக்கு, கருவுலக்கணக்கர்கள் ஊர் விநியோகம், செய்ய கணக்கர்கள் நியமிக்கப்பட்டனர். இதனால் இடைக்காலத்தில் ஊர் மற்றும் கோயில் நிர்வாகங்கள் வங்கி தொழிலில் ஈடுபட்டிருந்ததை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## பஞ்ச கம்மாளர்கள்

சங்க காலத்தில் மரம் கொல் தச்சன் எனக் குறிப்பிடப்படும் தச்சர்கள் ஐந்து பிரிவுகளாக பிரிந்து தங்களது தொழில்களை வளர்த்தனர். கல்தச்சர்கள், கோயில்கட்டுதல், வீடுகட்டுதல், சிற்ப வேலைகள் செய்தல், கோட்டைகள் கட்டுதல், போன்ற பணிகளில் ஈடுபட்டனர். .இடைக்காலத்தில் கொழுமம் பகுதியில் இருந்த சங்க கால மாடக்கோயில்கள் மண் செங்கல் சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டவையாகும் இக்கோயில்கள் இடைக்காலத்தில் கருங்கற்களால் கட்டப்பட்டன. எனவே கல்தச்சர்கள் மன்றாடிகளிடமும் வணிகர்களிடமும் கொடைகள் பெற்று கோயில், கட்டிடக்கலை பணி செய்தனர். மரத்தச்சர்கள் புதிய ஊர்கள் உருவாக்கம் செய்கின்ற போதும் வேளாண் நிலங்கள் உருவாக்கம் செய்யும் போதும் காடுகளை அழிக்கப்பட்டன. எனவே மரத்தச்சர்கள் வீடு, அரண்மனை போன்றவற்றிற்கு தேவையான மரச்சாமன் செய்யும் வேலைகளில் ஈடுபட்டனர். பொன்வேலை செய்பவர்கள், அரசாங்க நாணயம், பெண்கள் அணியும் நகைகள், கோயில் நகைகள் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர் .பண்டைய தென்கொங்கில் அமைந்த ஊர்கள் அனைத்தும் பெருவழிகள் மூலம் இணைக்கப்பட்டிருந்தது. இப்பெருவழிகளில் செல்லும் மாட்டுவண்டிகள், குதிரைகள், இவற்றிற்குக் கொல்லர்கள் இரும்புத் தொழில் செய்து பணி புரிந்தனர். விவசாய உற்பத்தி கருவிகள் செய்து வேளாண்மை தொழிலை மேம்பாடடையச் செய்தனர். கன்னர்கள் செம்பு வேலைசெய்தவர்கள் ஆவார்கள். வீட்டுக்கு தேவையான புழங்கு பொருள்கள் செய்து கொடுத்தனர். செம்பு பாத்திரங்கள் இடைக்காலத்தில் மதிப்பு மிக்கதாக கருதப்பட்டது. பஞ்ச கம்மாளர்கள் இடைக்காலத்தில் கோயிலோடு இணைக்கப்பட்டனர். கோயில் நிலங்கள் பஞ்ச கம்மாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. பஞ்சகம்மாளர்களுடன் சித்திரம் வரைபவர்கள், ரதகாரர்கள் சேர்ந்து பணிபுரிந்தனர். பாண்டியர்கள் உற்பத்திக்கு துணை நின்ற பஞ்ச கம்மாளர்களுக்கு சிறப்புரிமை வழங்கினர்.

## மருத்துவம்

சங்க காலத்தில் மருத்துவம் தென்கொங்கில் சிறந்திருந்தது. மலையும் மலைச்சாரலும் நிறைந்த பகுதியான தென்கொங்கில் மூலிகை செடிகள் இயற்கையாகவே அதிகம் கிடைத்தன. எனவே மருத்துவர்கள் தென்கொங்கு நாட்டில் அதிகம் குடியேற்றம் பெற்றனர் சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் விழுப்புண் தைக்கும் முறை பற்றி குறிப்பிடப்படுகின்றது. (பதிற்றுப்பத்து. 42) மருத்துவம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. (நற்றிணை 136 கலித்தொகை குறி: 20-21 கலி :பாலை: 33:14 16:19-21 புறம் 20:14-15) கோட்டைகள் நிறைந்த பகுதிகள், சந்தை நிறைந்த பகுதிகளில் மருத்துவர்களின் தேவை மிகுந்திருந்தது. தென்கொங்கு நாட்டில் அமைந்திருந்த மடங்கள், தேசாந்திரிகள் எனும் கல்வியாளர்கள் மூலமாக மருத்துவக்கல்வியை பரப்பின. மருத்துவர்களுக்கு மருத்துவக்காணி என்ற நிலம் ஒதுக்கப்பட்டதை கொழுமம் கோயில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கோயில் நிலங்களில் நந்தவனங்கள் உருவாக்கப்பட்டு மூலிகை செடிகள் வளர்க்கப்பட்டன. இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் நந்தவனக்குடிகள் என அழைக்கப்பட்டனர்.

## மடைத்தொழில்

சங்க காலத்தில் தென்கொங்கில் உதியன் அட்டில் (அகம் 168: 7:27) ஒன்று இருந்தாக சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. இடைக்காலத்தில் ஏற்பட்ட கோயில்கள் வளர்ச்சி காரணமாக அரசர்கள் மன்றாடிகள், வணிகர்கள், கோயிலுக்கு அமுதுபடிக்காக நெல்லை தானமாக அளித்தனர். கோயில்கள் மட்டுமின்றி மடங்களுக்கும் நெல் தானமாக அளிக்கப்பட்டது. இதன் மூலம் வழிநடையாக ஓரிடம் விட்டு மற்றோர் இடம் செல்லும் வழிநடை செல்பவர்களுக்கும் தேசாந்திரிகளுக்கும் கோயில்கள் மற்றும் மடங்களில் உணவு சமைக்கப்பட்டது. இதனால் கோயில்களில் மடைப்பள்ளிகள் தனியாக அமைக்கப்பட்டது.

## தேவதாசிகள்

சங்க இலக்கியங்கள் சங்க தமிழர் வாழ்வியலில் இசையும் கூத்தும் இரண்டற கலந்திருப்பதை புலப்படுத்துகின்றன. சங்ககாலத்தில் தொழில்முறை கலைஞர்களாக பாணர், பாடினியர், கோடியர், வயிரியா, விறலியர் போன்றோரை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (ஐங்குநுறூறு 215:3-4 பதிற்றுப்பத்து 17:7, 19:7-8 அகம் 45:11-12, 155:13-15 நற்றிணை 108) இடைக்காலத்தில் கொங்கு நாட்டில் தேவரடியார் முறை வளர்ச்சி பெற்றிருந்ததை தென்கொங்கு நாட்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஆடல் மகளிரான தேவரடியார்கள் கோயிலைத் துய்மை செய்தல், நீர் இறைத்தல், மாலை தொடுத்தல், மடப்பள்ளிக்கு உதவுதல், போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தனர் கொழுமத்து கல்வெட்டுகளில் ஒன்பது கரை நாட்டு தேவரடியார்கள் என சொற்கள் பயின்று வருவதால் தேவரடியார்கள் ஒன்பது கரை நாட்டிலுள்ள உள்ள அனைத்து கோயில்களிலும் சென்று பணி செய்தனர் எனலாம்.

## கணியர்கள் (ஜாதகம் கணிப்பவர்கள்)

தொல்காப்பியம் தமிழர்கள் நாளும் ஓரையும் பார்த்து வாழ்ந்தவர்கள் என குறிப்பிடுகின்றது.சங்க இலக்கியங்கள் வானில் உள்ள 27 நட்சத்திரங்களை குறிப்பிடுகின்றது. (அகம் 151:15 155:13-15 நற்றினை:373:6 புறம் 172 383 384 386 388) சங்க காலத்தில் கணியன் பூங்குன்றனார் ஒரு ஜோதிட மேதை. சங்க காலத்தில் ஜோதிடம் கணியம் என்று குறிப்பிடப்படுகிறது. இடைக்காலத்தில் தென்கொங்கை ஆண்ட மன்னன் மூன்றாம் வீரசோழன் ஆவான். இவன் சூரிய கிரகண நட்சத்திரத்தில் பிறந்தவன். எனவே அவன் ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர்கள் பரிகாரமாக கொழுமம் வீர சோழீஸ்வரர் ஆலயத்தை கட்டி சிவ பூஜை நடத்த கேட்டுக்கொண்டதை கொழுமம் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஜாதகம் கணித்தல் தொழிலுடன் சூரியனை மையமாக வைத்து வாஸ்து அமைக்கும் தொழிலான மனையடி சாஸ்திரம் பார்க்கும் தொழிலும் தென்கொங்கில் நடைமுறையில் இருந்தது. ஜோதிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் கணியன்செய் என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. தென் கொங்கில் கொழுமம், கடத்தூர் போன்ற கோயில்கள் சூரிய கதிர்கள் காலையில் லிங்கத்தில் படுமாறு கட்டடப்பட்டுள்ளன.

## பறை இசைக்கலைஞர்கள்

தொல்காப்பியத்தில் ஐவகை நிலங்களுக்கும் பறையும் யாழும் பண்ணும் கருப்பொருளாக குறிப்பிடப்படுகின்றன. கொழுமம் கல்வெட்டுகளில் பறை இசைக்கலைஞர்கள் உவச்சர்கள் என்ற அழைக்கப்பட்டனர். மன்றாடிகளின் ஆதரவில் உவச்சர்கள் வாழ்ந்தனர். அரச அறிவிப்புகள், பெருகி வரும் புனலை குறித்தல், வெள்ளத்தை அடைத்தல், உழவர் மக்களை அழைத்தல், போர் கொழுமாறு வீரர்களை அணி திரட்டுதல், வெற்றி தோல்வியை அறிவித்தல், வயல்களில் உழவு வேலை செய்வோருக்கு ஊக்கமளித்தல், விதைத்தல், அறுவடை செய்தல், காடுகளில் இருந்து விலங்குகளை விரட்டுதல், மன்னர்களின் செய்திகளை தெரிவித்தல், கூத்து, விழா இவற்றில் பறை இசைக்கலைஞர்கள் பணிபுரிந்தனர். உவச்சர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் உவச்சக்காணி என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இடைக்காலத்தில் மக்கள் பணி செய்யும் ஊழியர்களையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்களில் அம்மட்டன் (முடி திருத்துவோர்), கழிவுநீர் போகாட்டுவான், மடத்து தவசிகள், கோயில் நம்பியார் (பட்டர்கள்), நந்தவனம் செய்வார்கள், வெட்டி (நிலத்தை பண்படுத்தி சீரமைப்பவர்கள்), மூத்தவாள், கைக்கோளர் (கோயில் காவல் செய்பவர்கள்) தூதுவர்கள் போன்றவர்கள் அடங்குவார்கள்.

## முடிவுரை

தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ள வாழ்வியல் கோட்பாட்டு முறைகளையே இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இவ்இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் முறையையே கல்வெட்டு செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. சங்க கால தொழில்கள் தொல்காப்பிய இலக்கணப்படி அமைகின்றன.

இத்தொழில்களில் ஏற்பட்ட அமைப்பியல் மாற்றங்கள் சார்பு தொழில்களை ஏற்படுத்தியுள்ளன. தொழில் முறைப்பாகுபாடுகளால் சாதிய சிந்தனைகள் ஏற்பட்டது எனலாம்.

## References


Chandrababu, B.S., Thilagavathi, L. (2003) Trade in Kongu (up to 16th century A.D), Emerald Publishers, Chennai, India

Manickam, V. (2001) Kongu Nadu, a history up to A.D. 1400, Makkal Veliyeedu, Chennai, India

Sridhar, T.S., Poonkundran, R., Karunanandhan, R.P., Gowthamaputhiran, P. (2006) Coimbatore Mavatta Kalvettukal, 1st Vol, Tamil Nadu State Department of Archaeology, Chennai, India

Subramaniyan, S.V. (2010) Tholkapiyam Thelvurai, Manivasagar Pathipagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License